மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பண்டைய இலக்கியங்களில் செங்கோன்மையும் கொடுங்கோன்மையும்

# Monarchy and Tyranny in Ancient Literature

யோகாம்பிகை இளமுருகன்/ Yogambikai Illamurugan[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: yoga.murugan14@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழ் இலக்கியங்களில் செங்கோன்மையும் கொடுங்கோன்மையும் என்ற இந்த ஆய்வுக் கட்டுரை அக்காலக்கட்டத்தில் நமது அரசர்கள் தங்களின் ஆட்சியின் கீழ் அரசாங்கத்தை எம்மாதிரியான ஆட்சி முறையில் நடத்தியுள்ளார்கள் என்பதனை ஆராயவுள்ளது. பண்டைய தமிழ் இலக்கியப் பாக்கள் பொதுவாக மரபு அடிப்படையில் யாப்பு முறையோடு பாடப்பட்டிருக்கும். அவை எடுத்துரைக்கும் தலைவனது ஆட்சி செங்கோன்மையைத் தழுவியும் இருக்கலாம் அல்லது கொடுங்கோன்மையையும் தழுவி இருக்கலாம். திருக்குறள், புறனானூறு, நறுந்தொகை, இன்னா நாற்பது, பழமொழி நானூறு, பாரதியார் கவிதைகள் போன்ற இலக்கியங்களில் அரசன் கோல் முறைகளை ஆராயப்படவிருகின்றன. ஒரு குடியைக் காப்பதும் அழிவிக்கு இட்டுச் செல்வதும் நாட்டிலுள்ள அரசனின் செயல்பாடுகளில் இருக்கின்றன. நல்ல அரசனின் நற்செயல்களைப் போற்றும் பாக்கள் அவனை மட்டுமலலாது அந்நாட்டின் மக்களின் நல்ல நிலையையும் நாட்டின் நல்வளத்தையும் எடுத்தியம்பும். அதுவே கொடுமைகள் புரியும் அரசனைப் பாடும் பாக்கள் அவனைத் தூற்றியும் மக்களின் அவல நிலையையும் எடுத்துரைக்கும். இந்த ஆய்வுக் கட்டுரையில் ஓர் அரசனது செங்கோன்மையையும் கொடுங்கோன்மையையும் பண்டைய தமிழ் இலக்கியங்களில் வழி காண முடிந்துள்ளன.

**கருச்சொற்கள்:** செங்கோன்மை, கொடுங்கோன்மை, பண்டைய இலக்கியம்

**Abstract**

This research paper focuses on monarchy and tyranny in ancient Tamil literature examines the way our kings ruled the government under their leadership during that period. Ancient Tamil literary songs are usually sung in traditional Yappu style. The leadership style they refer to can be autocratic or tyrannical. Democratic styles are being explored in literature such as Thirukkural, Purananuru, Narunthogai, Inna Narpathu, Nanuru Pazhamozhi, Bharatiyar poems. Protecting a citizen and leading to destruction are among the functions of a king in a country. The songs that praise the good deeds of the good king will not only take him but also the good condition of the people of the country and the prosperity of the country. That's why the songs that sing about the king who knows the cruelties will defame him and highlight the plight of the people. In this research paper we have been able to trace the monarchy and tyranny of a king in ancient Tamil literature.

**Keywords:** monarchy, tyranny, kings

**முன்னுரை**

நம் தமிழ்க்குடி அரசர்கள் செங்கோன் ஆட்சியைத் தவறாது காத்து நின்றனர். நடுநிலமை தவறாது, யாருக்கும் சாராமல், குற்றத்தை இரக்கம் பாராது கடுமையாக ஆராய்ந்து அதன்பின் குற்றவாளிக்குத் தகுந்த தண்டணைகள் வழங்கும் அரச முறைமையே செங்கோன் முறைமையாகும். நடுநிலையாய் நிற்றல் அந்த அரசருக்கு மட்டுமின்றி அந்நாட்டு மக்களுக்கும் நாட்டின் வளத்திற்கும் நன்மை பயக்கும். செங்கோன் முறைபடி ஆட்சி நடத்தும் நாட்டு மக்கள் செழிப்புடன் வாழ்வர். அவ்வரசரின் தலைமைத்துவத்தைப் பற்றி சுற்றியுள்ள ஊர் மக்கள், புலவர்கள், அரசர்கள் யாவரும் போற்றுவர். வீரயுக நாயகன் வேள்பாரி செய்த செங்கோன் ஆட்சியைப் பற்றி இன்றளவும் பேசப்படுகின்றது. அவரின் தருமத்தைப் பற்றி புலவர்கள் ஏராளமாகப் பாடியுள்ளனர்.

தொடர்ந்து, கொடுங்கோன்மை அரசு வழி ஆட்சி புரியப்படும் நாடு பஞ்சம், பட்டினி, போர், இறப்பு, அநீதி இவைகளை எதிர்க்கொள்ளும். குடிமக்களை வருந்த செய்யும் காரியங்களைச் செய்பவர்கள் இவ்வாட்சியில் இருப்பர். இங்கு கொலைகள் நிகழும். கொள்ளைகளும் நிகழும். ஹிட்லரின் ஆட்சியில் இவை அனைத்தும் இடம்பெற்றிருக்கும். இப்படி ஆட்சி செய்யும் மன்னன் வெறுக்கப்படுவான்.

பண்டைய இலக்கியங்களில் உள்ள திருக்குறள், புறனானூறு, நறுந்தொகை, இன்னா நாற்பது, பழமொழி நானூறு, பாரதியார் கவிதைகள் போன்ற இலக்கியங்களில் செங்கோன் முறையும் கொடுங்கோல் முறையும் பற்றி பேசப்பட்டுள்ளது. ஓர் அரசன் எப்படித் தன் ஆட்சியில் மக்களையும் நாட்டையும் காத்தருள வேண்டும் என்ற தகவல்கள் அறிவுரைகளாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. இவை யாவும் நல்லாட்சிக்கு வித்திடுமென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

**ஆய்வின் நோக்கம்**

பண்டைய இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கும் பாடல்களின் மூலம் மன்னர்களின் செங்கோன்மை பற்றியும் கொடுங்கோன்மை பற்றியும் இந்த ஆய்வில் ஆராயப்படவுள்ளது. பண்டைய இலக்கியங்கள் சாதாரண மனிதனுக்கு மட்டுமின்றி மன்னர்களுக்கும் கூட வாழ்வியல் அறங்களைக் கற்பித்துள்ளன. ஒரு மன்னன் அரசாலும் பொழுதில் தன் நாட்டுக்காகவும் தன் அரச குடும்பத்திற்காகவும் பொது மக்களுக்காக நாட்டின் வளர்ச்சிக்காகவும் சில அறநெறிகளைப் பின்பற்ற வேண்டும். அப்படி அறநெறிகளைப் பின்பற்றாமல் பணத்தை முன்வைத்து, பேராசை உணர்வோடு ஆட்சி நடத்தும் ஒரு மன்னரின் கீழ் உள்ள நாடுகள் அழிவை எதிர்நோக்கும். அவ்வரசு கொடுங்கோன்மை அரசாக ஏற்கப்படும். அந்த நாட்டில் பஞ்சமின்றி மக்கள் செழிப்பாக வாழ்வதற்கும் போர், சண்டை இவை யாவும் நிலவாமல் நாட்டில் அமைதி சூழ்ந்து மக்கள் நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பண்டைய இலக்கியங்களில் மூலம் நம் முன்னோர்கள் அரசர்களுக்கு அறிவுரைகளைக் கொடுத்துள்ளனர். இவ்வாறு அறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்த

மன்னர்கள் இருக்கின்றனர். அந்த அறநெறிகளை இந்த ஆய்வில் கோடிட்டு உணர்த்தியுள்ளார் ஆய்வாளர்.

**முந்தைய ஆய்வு**

திருக்குறள் அனைவருக்கும் ஏற்ற அறநெறிகளை அள்ளித் தரும் ஓர் ஊற்றாகும். அரசியல் நெறி காட்டும் திருக்குறள் என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை ஒன்று படைக்கப்பட்டுள்ளது. தமிழரசன் (2022) தமது ஆய்வில் திருக்குறளில் சொல்லப்பட்ட அரசியல் அறநெறிகள் அக்காலத் தேவை கருதி சொல்லப்பட்டாலும் எக்காலத்துக்கும் எந்நாட்டு அரசியல் அணுகுமுறைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கி, அரசு செயல்படவேண்டிய முறைகளின் நுட்பங்களை எடுத்தியம்புகின்றன என்பதனையும்அரசியல் அதிகாரங்களில் அரசனின் இயல்புகள், மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள், அவன் ஆற்ற வேண்டிய கடமைகள், நாட்டின் சிறப்பு, நாட்டில் வாழும் மக்களின் சிறப்பு போன்ற செய்திகளை, இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல் என்பதனையும் பற்றி ஆராய்ந்துள்ளார்.

தொடர்ந்து, சங்க கால வாழ்வியல் விழுமியங்கள்: 'புறநானூற்றில்' அரசியல் அரங்கள் என்ற ஆய்வுக் கட்டுரையை ராஜா (2022) படைத்துள்ளார். சங்க காலப் புறப் பாடல்களும் அகப்பாடல்களும் வீரத்தையும் காதலையும் மட்டுமே இரு கண்களாகப் போற்றாமல் சமூகத்தில் உள்ள அனைத்துக் கூறுகளையும் சிறப்பித்துக் கூறுவதில் முன் நிற்கின்றன. அவ்வகையில் இந்தக் கட்டுரை 'புறநானூற்றில் வலியுறுத்தப்படும் அரசியல் அறங்கள் பற்றி ஆய்கிறது.

தொடர்ந்து, குறள் நெறி போற்றும் பொருள் நெறி என்ற ஆய்வுக் கட்டுரை திருக்குறள் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள சில முக்கியமான பொருள் நிலைப் பண்பாட்டுக் கோட்பாடுகளின் சிறப்புத் தன்மையை ஆரய்கின்றது.

**ஆய்வு அணுகுமுறை**

இந்த ஆய்வு ஒப்பியல் அணுகுமுறை, நூலக ஆய்வுமுறை போன்றவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்கு திருக்குறள், இன்னா நாற்பது, நறுந்தொகை, நீதிநெறி விளக்கம், பழமொழி நானூறு, பாஞ்சாலி சபதம், பத்துப்பாட்டு போன்ற நூல்கள் பயன்படுத்தப்பட்டன.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

**செங்கோன்மையில் கொடை தன்மை**

ஒரு நாட்டில் எவ்வளவுதான் அரசன் வல்லமை உடையவனாக இருந்தாலும் அவனுக்கு ஆயிரம் படைகள் இருந்தாலும் அவன் ஈகை தன்மை இல்லாமல் இருந்தால் அவன் ஒரு சிறந்த அரசனாகக் கருதப்பட மாட்டான். சிறந்த அரசனுக்கான தகுதிகளில் முக்கியமானது இந்த ஈகை தன்மையாகும். மக்களுக்கு இயன்றதைச் செய்வது அரசர்களின் கடமைகளில் ஒன்றாகும். அதேபோல பாரி மன்னன் அதற்கும் மேற்பட்டு முல்லைக்கும் தேர் கொடுத்துள்ளான்.

சுரும்பு உண நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரி"

-பத்துப்பாட்டு

வண்டுகள் தேன் உண்ணும் நாகமரங்கள் அமைந்துள்ள வழிப்பாதையில் படர்வதற்குக் கொழுகொம்பின்றி தவித்த முல்லைக் கொடிக்குத் தனது பெரிய தேரையே கொடுத்தவனும், அந்த வெள்ளை அருவிகள் மலைச் சரிவிலிருந்து விழும் பறம்பு மலையின் மன்னன் பாரி என்று இப்பாடல் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து மன்னனானவன் கொடையில் சிறந்தவனாக இருக்க வேண்டும் என்ற கூற்றைக் காண முடிகின்றது. கொடை வள்ளலாக இருந்த பாரியை இன்றளவும் மக்கள் போற்றுகின்றனர் என்றால் அவன் செங்கோன்மையை நிலைநாட்டியுள்ளான் என்று தெரிய வருகிறது.

**செங்கோன்மையில் விருந்தோம்பல்**

அக்காலத்தில் விருந்தோம்பல் பண்பு என்பது அனைவருக்கும் கடைபிடிக்கப்பட்டு வந்த அறச் செயலாகும். பண்டய இலக்கியங்களில் பல மன்னர்கள் விருந்தோம்பலை நாள் தவறாது செய்து வந்த செய்திகளையும் கூட நாம் கண்டுள்ளோம். விருந்தோம்பல் என்பது பசி என்று வருபவருக்குக் கேள்வி கேட்காமல் உணவு பரிமாறி அவர்களின் பசியைத் தீர்ப்பதாகும். மன்னர்களிடத்தில் இந்தப் பண்பு இருக்குமேயானால் அந்த நாட்டில் மக்கள் பஞ்சமின்றி வாழ்கின்றனர் என்று அர்த்தம். அப்படிதான் புறநானூற்றுப் பாடலில் அதியமானின் விருந்தோம்பல் பற்றிய செய்தி உள்ளது.

ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்;
பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்,
தலை நாள் போன்ற விருப்பினன்மாதோ

-புறநானூறு

அதியமான் மன்னன், அவரைத் தேடி யார் வந்தாலும் சரி அவர்கள் ஒரு நாள் வந்தாலும் இரு நாள் வந்தாலும் பல நாள் வந்தாலும் பல நாள் பலரைக் கூட்டிக் கொண்டு வந்தாலும் அவர் முகம் சுளிக்காது விருந்தோம்பலைச் செய்வார். அதுவும் முதல் நாள் எப்படி உபசரித்தாரோ அதே அளவு மறுநாளும் உபசரிப்பான் என்று அவை கூறியுள்ளார். இதன் வழி அக்கால மன்னர்கள் விருந்தோம்பலை ஓர் அறமாகப் பின்பற்றி செங்கோன்மையை நிலைநாட்டியுள்ளனர் என்பதை அறியலாம்.

**செங்கோன்மையில் மக்களின் பாதுகாப்பு**

மக்களின் பாதுகாப்பை ஒரு நாட்டின் தலைவனான அரசன் காக்க வேண்டும். குடிமக்களைப் பாதுகாத்தலைக் குடி ஓம்பல் என்று வள்ளுவர் கூறுகின்றார். பாதுகாப்பு என்பது பகைவர்களிடமிருந்து மட்டுமல்ல. நோய், பேரிடர், வன்முறை, வறுமை இவைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பது அரசனின் கடமையாகும். மேலும், நோயில்லாமல் வாழ்தல், செல்வம் கொண்டிருத்தல், விளைவு உடைமை, இன்பம் பெற்றிருத்தல், பாதுகாப்பு கொண்டிருத்தல் என்ற ஐந்தும் அந்நாட்டில் இருந்தால் அந்த நாடு செழிப்பான நாடாகவும் அழகு கொண்டிருக்கும் நாடாகவும் கருதப்படும் என்கிறார் வள்ளுவர்.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் ஐந்து - குறள் 738

என்ற இந்தத் திருக்குறளில் மக்களின் துயர்களைத் தீர்ப்பது மன்னனின் கடமை என்றும் அந்த மன்னன் வறுமையைப் போக்க நாட்டில் வளங்களைச் சேர்த்து வைத்திருத்தல், துன்பத்திலிருந்து பாதுகாத்தல், இன்பமாக வைத்திருத்தல், பாதுகாப்பு அரன்களை வலுப்படுத்துதல் போன்ற செயல்களைச் செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். இந்த ஐவகை பாதுகாப்புகளையும் மக்களுக்குக் கொடுக்கும் மன்னன் நாட்டையாளும் மன்னன்களில் தலைசிறந்தவனாகவும் அவனது செயல் திறன்களில் முதன்மையாக மக்களைப் பாதுகாக்கும் கடமையை வைத்திருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார். ஆகவே, செங்கோல் முறையில் ஆட்சி செய்யும் மன்னன் ஐவகை திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**செங்கோன்மையில் நடுநிலைமை**

மன்னனானவன் ஆட்சி புரியும் பொழுது எந்த ஒரு பாராபட்சமும் பாராமல் யாரிடத்திலும் இவர் வேண்டியவர் இவர் வேண்டாதவர் என பாராது நடுநிலையோடு செய்த தவற்றிற்கான தண்டனையை வழங்க வேண்டும். குற்றங்களை ஆராயாமல் அவர்களுக்குத் தண்டனை வழங்கக் கூடாது. குற்றத்தை ஆராய்ந்து உயர்வு தாழ்வு பாராமல் சரியான தண்டனையை வழங்கும் அரசன் செங்கோன்மையைப் பின்பற்றுகிறான் என்பதை அறியலாம். நீதி தவறி குற்றத்தை ஆராயாமல் தண்டனை கொடுத்த அரசன் உயிர் நீத்தான் என்பதை சிலப்பதிகாரக் கதையில் காணலாம். நடு நிலையோடு அரசாட்சி செய்யும் அரசன் போற்றப்படுகிறான்.

கண்ணோட்டம் இன்மை முறைமை தெரிந்து ஆள்வான்
உண்ணோட்டம் இன்மையும் இல்
(நான்மணிக்கடிகை.96)

என்ற இந்தப் பாடல் வரிகளில் யாரிடத்திலும் ஓர் அரசனானவன் பாராபட்சம் பாராமல் நடுநிலைமையோடு குற்றத்திற்கான தண்டனையை வழங்கும்பொழுது அவன் அரசாலும் முறையைப் பின்பற்றுகிறான் என்றும் மற்றவரோடு கலந்துரையாடி அதன் பின்பு ஒரு முடிவுக்கு வந்து செயல்படுகிறவன் என்றும் காணமுடிகின்றது.

**கொடுங்கோன்மையில் கடமை மறத்தல்**

பொது வாழ்வின் நன்மையைக் கருதி குற்றம் புரிபவர்களைத் தண்டிக்கும் உரிமை ஒரு சிறந்த அரசனனுக்குவுண்டு. ஆனால், அவனே தன் கடமையையும், பொறுப்புகளையும் மறந்து தன்னுடைய ஆற்றலையும், அதிகாரத்தையும் நீதியற்ற வழியில் செலுத்தி ஆட்சி செய்தால் அது கொடுங்கோல் ஆட்சியாகும். அப்படி குடிமக்களை வருத்தும் கொடுங்கோல் ஆட்சியின் கீழிருந்து வாழும் செல்வந்தலை, வறுமையினும் துன்பமுடையது.

இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின் -குறள் 558

மக்களின் நலனில் அக்கறையின்றி ஆட்சி புரியும் அரசனின் கொடுங்கோல் ஆட்சியின் கீழிருந்து கிடைக்கப் பெறும் செல்வநிலையானது, வறுமை நிலையை விட கொடியதாகும் என்கிறார் வள்ளுவர்.

கூற்றம் உயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து
மாற்றம் உடையாரை ஆராயாது - ஆற்றவும்
முல்லை புரையும் முறுவலாய்! செய்வதெள்
வல்லை அரசாட்கொளின்?
- பழமொழி நானூறு

முல்லை அரும்புகளைப் போன்ற பல்வரிசையினைக் கொண்டவளே, கூற்றமானது வந்து உயிரினைக் கொள்ளுகின்ற போது, கொள்ளப்படுபவரை அறிந்து அவர் தனக்குச் சொல்லப் போகும் மாற்றங்களைக் கேட்டு, உயிரைக் கொள்வதா அல்லது விடுவதா என்று ஆராய்வதில்லை. அதுபோல அரசனானவன் குடிமக்களைத் துன்புறுத்தி அடிமையாக்கினால் அது அரசாட்சியில்லை. குடிகளை நன்முறையில் பேணாது துன்புறுத்தும் கொடிய அரசன் எமனைப் போன்றவன். மக்களைக் காப்பது அரசனின் கடமை என்று கூறும் பாடலின் மூலம் கொடுங்கோன் அரசாட்சியை அனைவரும் கண்டித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்
(பாரதியார்- பாஞ்சாலி சபதம்)

பெண் என்றும் பாராமல் பாஞ்சாலியை அவையில் இழுத்து, தகாத இழி சொற்கள் பேசி தகாதசெயல் செய்தனர். அது கொடுங்கோன்மையின் உச்சம். அதனால்தான் பேயரசு என்று கோபப்பட்டார் பாரதி. நல்லாட்சியானால் குடிமக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வர். அரசன் கொடுமை செய்தால் குடிமக்கள் துன்பம் பொறுக்க முடியாது கண்ணீர் சிந்துவர். அப்படிக் குடிமக்கள் விட்ட கண்ணீரே அவ்வரசனின் செல்வத்தை அழிக்கும் கருவியாகும். தொடர்ந்து, கொடுங்கோல் ஆட்சி செய்யும் மன்னரின் ஆளுகைக்கு உட்பட்டு வாழ்வது துன்பம் தருவதாகும்.

கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
- கபிலர்-இன்னா நாற்பது

தருமம்மில்லாத கொடுங்கோல் முறையில் அரசன் ஆட்சி செய்யும் நாட்டைக் காட்டிலும் கொடிய மிருகங்கள் வாழுகின்ற காடு நல்லது. கொடுங்கோலனாய்க் குடிகளை வருத்தி, அதனால் பொருள் வாங்கும் கொடிய அரசன் மூர்க்கனாவான். ஆக, கொடுங்கோல் அரசைக் காட்டிலும் மிருகங்கள் சிறந்தவை எனவே இப்பாடல் காட்டுகின்றது.

**நிறைவுரை**

இவ்வாய்வுக் கட்டுரை பண்டைய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்யுள்களில் மன்னர்கள் எவ்வாறு நல்லாட்சி அதாவது செங்கோன்மையை நிலைநாட்டியுள்ளனர் என்றும் நிலைநாட்ட வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை ஆராய்ந்துள்ளது. மேலும், ஒரு மன்னன் மக்கள் நலனில் அக்கறையின்றி, சுயநலத்திற்காக நாட்டையும் மக்களையும் பயன்படுத்தும் செயலினைக் கண்டித்துச் செய்யுள்கள் இயற்றப்பட்டுள்ளன. கொடுங்கோன்மை செய்த மன்னன் சிறந்த மன்னன் இல்லை என்று எடுத்தியம்பியுள்ளன. கொடுங்கோல் ஆட்சி செய்யும் மன்னர்கள் பற்றியும் மக்களின் வாழ்க்கை நிலையைப் பற்றியும் செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன. பண்டைய இலக்கியங்களில் பல உயர்ச் சிந்தனைகள் அடங்கிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. மக்களுக்கு மட்டுமல்லாது அரசர்களுக்கும் மக்களின் தலைவனாக ஏற்கப்படுபவர்களும் இத்தகு அறிவுரைகளைக் கொண்ட இலக்கியப் பாடல்கள் படித்து அதில் உள்ள நல்ல கருத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து பண்டைய இலக்கியங்களில் உள்ள பாடல்களின் வழியில் ஆய்வுக் கட்டுரைகள் படைக்கப்பட வேண்டுமென்று ஆய்வாளர் நம்புகிறார்.

## துணைநூற்பட்டியல்


Muthukamalam.com / Essay literature - கட்டுரை - இலக்கியம். (n.d.). Muthukamalam.com / Welcome to Muthukamalam Tamil Web Magazine

Siragu. (2019, November 23). ஆய்வு வழியில் வள்ளுவர் « Siragu Tamil online magazine, news. Siragu Tamil Online Magazine, News.

ஆ. சிவசுப்பிரமணியன். (2014). சிலப்பதிகாரம் கவிதையியல் - பண்பாட்டியல் - மொழியியல் - அரசியல்.

கட்டுரைகள். (n.d.). Manivasagar Arutpani Mandram.